FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319428 10/2026/ACICB

1. District : Coimbatore PS: VBAC Year: 2026 FIR No.: Date: 13.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Monday Date from : 13.07.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 04.45 hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 13.07.2026 Time : 15.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Vol-I Time : 15.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed in Tamil
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 25 KM South-West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : K.G. Chavadi RTO Check Post (Outgoing) Palakadu Main Road. Coimbatore District.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. T. Sangeetha (b) Father's/ Husband's Name : V. Sakthivel.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Inspection Cell Officer/Tahsildar (g) Address : District Inspection Cell Office, Coimbatore.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tr. S. Arulдoss, S/o. M. Sundaram, Motor Vehicle Inspector (Non-Technical) I/C. K.G. Chavadi RTO Checkpost (Out Going), Palakadu Main Road, Coimbatore
(2) Tmt. C. Kalpana Devi, W/o. Ambedkumar, Assistant -do-
(3) Tmt. S. Padma, Office Assistant. -do-

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: Before the Hon'ble Principal District and Sessions Judge, Combatore.

Separate Sheets attached herewith.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

13/7/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13/07/2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.07.2026 @ 19.00 hrs

Name: பெயர் R. Ezhilarasi,
Rank: நிலை Inspector of Police, Vigilance and Anti-Corruption, Combatore.
No.
13.07.2026

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 10/2026/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.8319428யின் தொடர்ச்சி...

இன்று 13.07.2026-ம் தேதி 15.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரும்தி.T.சங்கீதா அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 10/2026/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு; அனுப்புநர், T.சங்கீதா, துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண். 114/2026/ஐ1, நாள்: 13.07.2026. பொருள்: திடீர் சோதனை - கோயம்புத்தூர் மாவட்டம், கந்தேகவுண்டன்சாவடி, போக்குவரத்துத்துறை சோதனைச் சாவடி (வெளிச்செல்கை) திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. கோயம்புத்தூர் மாவட்டம் பாலக்காடு மெயின்ரோடு, கந்தேகவுண்டன் சாவடியில் அமைந்துள்ள போக்குவரத்துத்துறை சோதனைசாவடியான, கந்தேகவுண்டன் சாவடியில் (வெளிச்செல்கை) சோதனைச்சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள், அந்த சோதனை சாவடியை கடந்து செல்லக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல், E-Way Bill மற்றும் Trip Sheet, ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச் சாவடி சீல் வைக்கவும், வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெற்றுவருவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின்

பேரில், கோவை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் மற்றும் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் காவல் குழுவினர் சகிதம் மேற்படி சோதனைச் சாவடியை சோதனை செய்வதற்காக, இன்று 13.07.2026-ம் தேதி அதிகாலை 4.45 மணியளவில் போக்குவரத்துத்துறை சோதனைசாவடி, கந்தேகவுண்டன் சாவடியில் (வெளிச்செல்கை) அலுவலகத்திற்கு வந்தடைந்து, அச்சோதனைச்சாவடியின் அலுவலகத்திற்கு வெளியே அதன் நுழைவாயிலுக்கு இடதுபுறமாக கையில் டார்ச்சு லைட் உடன் சேரில் அமர்ந்திருந்த பெண் அலுவலரிடம், நான் என்னையும் என்னுடன் வந்திருந்த ஆய்வாளர் திருமதி.R.எழிலரசி மற்றும் காவல் குழுவினர்களை அறிமுகம் செய்துகொண்டு திடீர் சோதனை செய்ய வந்துள்ள விபரம் தெரிவித்து அவரைபற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் பத்மா என்றும் தான் இச்சோதனை சாவடியில் அலுவலக உதவியாளராக கடந்த 10.06.2025-ம் தேதியிலிருந்து பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் இச்சோதனை சாவடியில் பணிபுரியும் மற்ற அலுவலர்கள் குறித்து விசாரிக்க, அவர் அப்போதைய சிப்டில், மோட்டார் வாகன ஆய்வாளர் (Non-Technical) திரு.அருள்தாஸ் மற்றும் உதவியாளர் திருமதி.கல்பனா தேவி ஆகியோர் அலுவலில் இருப்பதாகவும், அவர்களில் மோட்டார் வாகன ஆய்வாளர் அவரது அறையில் இருப்பதாகவும், உதவியாளர் திருமதி.கல்பனா தேவி என்பவர் கணினி அறைக்கு அருகிலிருக்கும் Record Room-ல் இருப்பதாகவும் தகவல் தெரிவித்தார். மேலும் வாகனங்களை நிறுத்த திரு.ஜீவா, திரு.பீர்முகமது மற்றும் திரு.உமேஷ் ஆகியோர் மேற்படி அந்த இரவு சிப்டில் அவர்களுக்கு உதவி செய்துகொண்டிருந்ததாகவும், அப்போது அவர்கள் தேநீர் அருந்த கடைக்கு சென்றிருப்பதாகவும் தெரிவித்ததை தொடர்ந்து, மேற்படி திருமதி.பத்மா என்பவரை அழைத்துக்கொண்டு அச்சோதனைச்சாவடிக்குள் நுழைந்தவுடன் அதன் பிரதான ஹாலின் வடக்கிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் அமரும் டேபிளின் இடதுபக்க டிராயர் திறந்த நிலையிலிருந்தது மேலும் அதில் ரூபாய் நோட்டுக்கள் வகைப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த டேபிளின் மேற்குபக்கமிருந்த சீல் வைக்கப்பயன்படுத்தும் டேபிளின் மேல்

வைக்கப்பட்டிருந்த POS மெசினுக்கடியில் சில ரூபாய் நோட்டுக்களும், அந்த டேபிளின் முதல் அடுக்கில் ரூபாய் நோட்டுக்கள் முறையாக வகைப்படுத்தப்பட்டு காணப்பட்டன. மேற்படி பிரதான அறையினை ஒட்டி அமைந்திருந்த மோட்டார் வாகன ஆய்வாளரது அறையில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அருள்தாஸ் என்பவரிடமும் அங்கிருந்த கணினி அறையினை ஒட்டியிருந்து ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்த அறையினுலிருந்த உதவியாளர் திரு.கல்பனாதேவி ஆகியோரிடம் அச்சோதனை சாவடியை சோதனைக்கு வந்துள்ள விபரம் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து உதவியாளரை விசாரிக்க, அவர் அவ்வலுவலகத்தில் உதவியாளராக கடந்த 12.08.2025 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரிக்க அவர், தான் கடந்த 04.08.2025 முதல் மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) ஆக அந்த சோதனைசாவடியில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும் அவர் 12.07.2026-ம் தேதி இரவு 08.00 மணி சிப்டுக்கு அறிக்கை செய்ததாகவும், தனது சிப்டில் மேற்படி உதவியாளர் திருமதி.கல்பனாதேவி மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா ஆகியோர் தன்னுடன் பணிசெய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் அவரிடம் பணியாளர் பணம் கையிருப்பு பதிவேட்டினை கேட்டு வாங்கி அதை பார்வையிட்டதில் அதில் அவரது பெயரில் ரூ.9,300/- என்ற தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் அவரிடமுள்ள பணத்தைபற்றி விசாரிக்க அவர் தனது Shoulder Bag-லிருந்து ரூ.5,010/-ஐ எடுத்து ஆஜர் செய்தார், அந்த பணம் குறித்து அவரை விசாரிக்க அவர் கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் பகல் சிப்டில் பணிபுரிந்ததாகவும், வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு சிப்டில் பணிபுரிந்தாகவும் தெரிவித்தார். தான் 11.07.2026-ம் தேதி சனிக்கிழமை இரவு சிப்டில் பணியிலிருந்தபோது வாகன ஓட்டுநர் மற்றும் கிளீனர்களிடமிருந்து கலெக்ஷன் செய்யப்பட்ட தொகை ரூ.45,000/-ல் அனைவருக்கும் கொடுத்ததுபோக தனக்கான தொகை ரூ.30,000/- எனவும், அத்தொகையில் சுமார் ரூ.20,000/-த்தை கோவைப்புதூரில் தான் வாடகைக்கு தங்கியுள்ள அறையில் வைத்ததுபோக மீதித்தொகையான ரூ.5,010/-ஐ எடுத்துவந்ததாகவும், சோதனைச்சாவடியில்

எப்படியும் பணத்தை வாகன ஓட்டுனர்கள் / கிளீனர்கள் கொடுப்பார்கள் என்பதால் தான் கொண்டுவந்திருந்த பணத்தைவிட அதிகமான தொகையை பணக்கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிட்டதாகவும், சனிக்கிழமை இரவு வரவு வந்த பணத்தின் ஒரு பகுதிதான் தனது Shoulder Bag-ல் வைத்திருந்த மேற்படி பணம் எனவும் தெரிவித்தார். மேற்படி தொகையான ரூ.5,010/-த்தை மோட்டார் வாகன ஆய்வாளர் தான் சனிக்கிழமை இரவு சிப்டின் போது வசூல் செய்யப்பட்ட மாமூல் தொகையின் ஒரு பகுதி எனத்தெரிவித்ததால் மேற்படி கையூட்டுப்பணம் ரூ.5,010/-ஆனது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா என்பவரிடம் பணம் குறித்து கேட்க அவர் தான் 12.07.2026-ம் தேதி இரவு சிப்டிற்கு வரும்பொழுது ரூ.500/- கொண்டு வந்திருந்ததாகவும் அதுசம்மந்தமாக பணப்பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்து, ரூ.500/-ஐ அவரது Hand Bag-லிருந்து எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அங்கிருந்த உதவியாளர் திருமதி.கல்பனாதேவி என்பவரிடம் பணம் குறித்து விசாரிக்க அவர் தான் 12.07.2026-ம் தேதி இரவு சிப்டிற்கு வரும்பொழுது ரூ1,500/- கொண்டு வந்திருந்ததாகவும் அதுகுறித்து பணப்பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்து அவரது Hand Bag-லிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதுசம்மந்தமாக அவ்வலுவலகத்தின் பணியாளர்கள் பணப்பதிவேட்டினை பார்வையிட்டபோது அவர்கள் சொன்னதுபோல் சரியாக இருந்ததால், மேற்படி இருவரின் பணமும் அவர்களது சொந்தப்பணம் என்பதால் அது அவர்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் அந்த சோதனைச்சாவடியின் பிரதான அறையிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் பயன்படுத்தும் டேபிள் மற்றும் சேர், சீல் வைக்கும் டேபிளின் மேற்பகுதி மற்றும் அதன் அடிப்பகுதியில் காணப்பட்ட பணம் குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அருள்தாஸ், உதவியாளர் திருமதி.கல்பனா தேவி மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா ஆகியோரிடம் கேட்க அவர்கள், அத்தொகைகளானது, 12.07.2026-ம் தேதி இரவு சிப்டில் 3.00 மணிக்கு மேல் சோதனைக்குழுவினர் வருவதற்கு முன்னர், அச்சோதனைச்சாவடியை கடந்து செல்லும் வாகனங்களை தனிநபர்களான திரு.ஜீவா, திரு.பீர்முகமது மற்றும் திரு.உமேஷ்

ஆகியோர்களது உதவியுடன் நிறுத்தி, வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிமிருந்து வசூல்செய்யப்பட்ட தொகைகள் என்ற விபரம் தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து, மோட்டார் வாகன ஆய்வாளர், அச்சோதனைச் சாவடியின் பிரதான அறையில் சீல் வைக்கும் பகுதியிலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் பயன்படுத்தும் இருக்கைக்கு முன்னால் இருந்த டேபிளின் டிராயர் மற்றும் சீல் வைக்கும் டேபிள் பகுதிகளிலிருந்த ரூபாய் நோட்டுகளை, உதவியாளர் திருமதி.கல்பனா தேவி மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா ஆகியோர் மூலமாக எடுத்து ஆஜர் செய்தனர். அவற்றை எண்ணிப்பார்க்கையில் அதில் 500x63=31,500, 100x3=300 என மொத்தம் ரூ.31,800/- இருந்தது. அதனைத்தொடர்ந்து மேற்படி சீல் வைக்கும் டேபிளின் மேலிருந்த POS மெசினுக்கு அடியிலிருந்து எடுத்து ஆஜர் செய்யப்பட்ட ரூபாய்நோட்டுக்களை எண்ணிப்பார்க்க அதில் 200x1=200, 100x2=200 மற்றும் 50x1=50 என மொத்தம் ரூ.450/- இருந்தது. அதனைத்தொடர்ந்து மேற்படி சீல்வைக்கும் டேபிளின் கீழிருந்த இரண்டு அடுக்குகளில் முதல் அடுக்கிலிருந்து ஆஜர் செய்யப்பட்ட நோட்டுக்களை எண்ணிப்பார்க்கையில் அதில் 500x7=3,500, 200x2=400, 100x23=2,300 மற்றும் 50x5=250 என மொத்தம் ரூ.6,450/- இருந்தது. எனவே மேற்படி கையூட்டுப்பணம் முறையே ரூ.31,800/-, ரூ.450/- மற்றும் ரூ.6,450/- என மொத்தம் ரூ.38,700/- ஆனது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவர்களிடம் வேறுபணம் ஏதாவது உள்ளதா என விசாரிக்க, மோட்டார் வாகன ஆய்வாளர், தான் 12.07.2026-ம் தேதி இரவு சிப்டிற்கு வந்ததிலிருந்து நள்ளிரவு 3.00 மணிக்கு முன்னர், மேற்சொன்ன மூன்று தனிநபர்களின் உதவியுடன் அச்சோதனை சாவடியை கடந்து சென்ற வாகனங்களை நிறுத்தி, அதன் ஓட்டுநர் மற்றும் கிளீனர்களிடமிருந்து கலெக்ஷன் செய்யப்பட்ட தொகையில் ரவுண்டாக ரூ.50,000/-த்தை மட்டும் கவரில் போட்டு அதை பத்திரமாக வைக்கும்படி உதவியாளர் திருமதி.கல்பனாதேவியிடம் கொடுத்துள்ளதாக தெரிவித்ததின்பேரில் மேற்படி தொகை குறித்து திருமதி.கல்பனா தேவி என்பவரிடம் கேட்க அவர் சோதனைக்குழுவினராகிய நாங்கள் வரும்பொழுது அவரிருந்த ஆவணங்கள்

வைப்பறையில், அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களில் DEC-16 என்று குறிப்பிடப்பட்ட ஒரு ஆவணத்திற்கு நடுவே வைக்கப்பட்டிருந்த பின்னடிக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு காக்கிகவரை எடுத்து ஆஜர் செய்தார். அதனைத்திறந்து பார்த்தபோது அதில் ஒரு 500 ரூபாய் நோட்டு கற்றை இருந்தது. அதை எண்ணிப்பார்க்கையில் 500x100=50,000/- இருந்தது. மேலும் மேற்படி பணமானது வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடமிருந்து பெறப்பட்ட கையூட்டு பணமென்பதால் மேற்படி காக்கிநிற கவரும், அதனுள் வைக்கப்பட்டிருந்த கையூட்டுத்தொகை ரூ.50,000/- ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் அதற்கு முந்தைய இரவு சிப்டில் பணியிலிருந்தபோது வாகன ஓட்டுநர் மற்றும் கிளீனர்களிடமிருந்து கலெக்ஷன் செய்யப்பட்ட தொகையில் தனது செலவு, தற்போது கையில் வைத்திருந்த தொகை மற்றும் இதர செலவுகள் செய்தது போக மீதமுள்ள தொகை சுமார் ரூ.20,000/-ஐ கோவைப்புதூரில் உள்ள தனது அறையில் வைத்துள்ளதாகவவும், அதனை தன்னை அழைத்துச்சென்றால் எடுத்துவந்து ஆஜர் செய்வதாகவும் தெரிவித்ததின் பேரில் அவரை, சோதனைக்குழுவில் இடம்பெற்றிருந்த காவலர்களுடன் சுமார் 6.15 மணிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.. பின்னர் சுமார் 07.30 மணிக்கு மேற்படி காவலர்களுடன் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அருள்தாஸ் அவர்கள் அந்த சோதனை சாவடிக்கு வந்து அவர் தங்கியிருந்த அறையில் வைக்கப்பட்டிருந்த கலெக்ஷன் தொகை என தெரிவித்து ஆஜர் படுத்திய ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்க்கையில் அதில் 500x25=12,500, 200x3=600, 100x20=2,000, 20x30=600 மற்றும் 10x13=130 என மொத்தம் ரூ.20,030/- இருந்தது. மேலும் மேற்படி தொகையும் கையூட்டுப்பணம் என்பதால் அத்தொகையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து அச்சோதனைச் சாவடியின் பிரதான அறை, மோட்டார் வாகன ஆய்வாளர் அறை, மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களது அறையினை ஒட்டியிருந்த ஆவண அறை, ஓய்வறை, கணினி அறை மற்றும் அதை ஒட்டியிருந்த மற்றொரு ஆவணப்பதிவறை ஆகியவை பார்வையிடப்பட்டதில், உதவியானர் திருமதி.கல்பனா தேவி பயன்படுத்திவந்த

கணினி அறையில் கம்யூட்டர் டேபிளின் டிராயரில் ரூபாய் நோட்டுக்கள் காணப்பட்டன. அவற்றை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.1,07,600/- இருந்தது. அது குறித்து திருமதி.கல்பானா தேவியிடம் விசாரிக்க அவர், மேற்படி தொகைகளானது 12.07.2026-ம் தேதி காலை 08.00 மணியிலிருந்து அன்றிரவு 08.00 மணிவரை வாகன ஓட்டுனர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அரசுக்கு செலுத்தவேண்டிய சாலைவரி மற்றும் இணக்கக் கட்டணங்களான ரூ.88,600/- எனவும், மீதித்தொகை ரூ.19,000/- 12.07.2026-ம் தேதி இரவு 08.00 மணியிலிருந்து திடீர்சோதனைக்குழுவினர் வரும் வரையில் தன்னால் மேற்சொன்ன வகையில் வசூல் செய்யப்பட்ட தொகை எனவும் தெரிவித்தார். இது குறித்து கணினி பதிவுகள் மற்றும் பணப் பதிவேடானது பார்வையிடப்பட்டு சரிபார்க்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக மேற்படி தொகைகள் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதற்கிடையில் அச்சோதனைசாவடிக்கு கையில் ஆவணத்துடனும், பணத்துடனும் சீல் வைக்கும் கவுண்டருக்கு முன் வந்து நின்ற திரு.ராபர்ட் என்வரை விசாரிக்க அவர் தான் ஓட்டிவந்த TN 38 CF 2454 என்ற வாகனத்தில் சென்னையிலிருந்து TMT கம்பிகளை ஏற்றிக்கொண்டு கேரள மாநிலம் கொச்சினுக்கு செல்லயிருப்பதாகவும், மேற்படி TMT Load-ற்கான Trip Sheet-ல் சீல் வைப்பதற்காக தான் ரூ.1,000/-த்துடன் இச்சோதனைச்சாவடிக்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும் தான் பணம் கொடுக்காவிட்டால், அச்சோதனைசாவடியின் அலுவலர்கள் தனது வாகனத்தை வேண்டுமென்றே நிறுத்திவைத்து பைன போட்டுவிடுவதாக மிரட்டுவார்கள் என்றும் தன்னை வெகுநேரம் காக்க வைத்துவிடுவார்கள் என்பதால் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு தான் வேறுவழியில்லாமல் பணம் கொடுக்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார். பின்னர் மேற்படி வாகன ஓட்டுநரை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அவர் மாமூல் கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் ரூ.1,000/-மும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி வாகனம் தொடர்பான ஆவணங்கள் நகலெடுக்கப்பட்டு அதில் அவரிடம் சான்றொப்பம் பெறப்பட்டு அவைகளும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் 13.07.2026-ம் தேதி காலை 08.00

மணிக்கு பகல் சுழற்ச்சிப்பணிக்காக மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.எழிலரசி, உதவியாளர் திருமதி.சாந்தி மற்றும் அலுவலக உதவியாளர் திரு.ஜெயசீலன் ஆகியோர் அந்த சோதனைச்சாவடிக்கு வந்து அறிக்கை செய்துகொண்டனர். அவர்களிடம் இரவு சிப்டில் பணிமுடித்தமைக்கான பொறுப்புகள், வசூல் செய்யப்பட்ட அரசு கட்டணங்கள் மற்றும் ஆவணப்பொறுப்புகள் அனைத்தும் முறையாக ஒப்படைக்கப்பட்டு அதனை அவர்கள் சரிபார்த்துக்கொண்டார்கள். பின்னர் அவர்களை தொடர்ந்து அலுவல் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதின்பேரில் தொடர்ந்து அச்சோதனை சாவடியில் பணிகள் வழக்கம்போல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேலும் அச்சோதனைச்சாவடியின் உதவியாளர் திருமதி.கல்பனாதேவி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அருள்தாஸ் ஆகியோரை நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேலும் அச்சோதனையின்போது வாகன ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் கையூட்டாக பெறப்பட்ட மொத்தப்பணம் ரூ.1,14,740/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த சோதனைசாவடியில் பராமரிக்கப்படும் ஆவணங்களான (1).தினசரி கணக்கு பதிவேடு, (2).வருகைப்பதிவேடு (3).பணியாளர்களின் பணம் கையிருப்பு பதிவேடு, (4).அலுவலர் தினசரி பணிப்பதிவேடு ஆகியவை பார்வையிடப்பட்டு அதன் உரிய பக்கங்கள் மற்றும் Government of Tamil Nadu Department of Transport Checkpost Differential fee e-Receipt dated 13.07.2026 at 12.13 am in connection with Road Tax of Vehicle bearing Chassis No.MB1H3VPD0TRLW6629 மற்றும் அதன் இணைப்பு பக்கங்கள் ஆகியவை நகலெடுக்கப்பட்டு அவைகளில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.S.அருள்தாஸ் அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையானது 13.07.2026-ம் தேதி அதிகாலை 4.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மதியம் 12.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளையும், அதன் விபரங்களையும் இத்துடன் இணைத்துள்ளேன். அவற்றில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும், குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம்

கையூட்டுப்பணம் ரூ.1,14,740/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அருள்தாஸ், உதவியாளர் திருமதி.கல்பனாதேவி மற்றும் TN 38 CF 2454 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் திரு.ராபர்ட் ஆகியோர்களின் வாக்குமூலங்களையும் இத்துடன் இணைத்துள்ளேன். எனவே கோவை மாவட்டம் போக்குவரத்துத்துறை சோதனைசாவடியான, கந்தேகவுண்டன் சாவடி (வெளிச்செல்கை)-ஐ கடந்து சென்ற வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடம் மேற்சொன்ன வகையில் கையூட்டு வாங்கிய அந்த சோதனைச்சாவடியின் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அருள்தாஸ், உதவியாளர் திருமதி.கல்பனாதேவி மற்றும் அலுவலக உதவியாளர் திருமதி.பத்மா ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (Sdxxxx) T.சங்கீதா, துணை ஆய்வுக்குழு அலுவலர் / வட்டாட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு:- (1).திடீர் சோதனை நடவடிக்கைகள், (2).கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,14,740/-, (3).கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் (4).பதிவு செய்யப்பட்ட 3 வாக்கு மூலங்கள். Respected Madam, I have received the complaint on 13.07.2026 at about 15.30 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.10/2026/AC/CB u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at about 16.00 hrs (Sd. xxxxxx) R.எழிலரசி, 13/07/2026 Inspr. of Police, V&AC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(R.எழிலரசி) 13/07/2026
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.